**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 411/2021**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜமால் | தாலுகா | : | தூத்துக்குடி |
| தந்தை பெயர் | : | இக்பால் | தொழில் | : | உதவி காவல் கண்காணிப்பாளர் |
| கிராமம் | : | தூத்துக்குடி | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 29th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு குற்றாலம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, புளியறை காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பில் இருந்தபோது, 11.09.2015ம் தேதி, புளியறை காவல்நிலைய குற்ற எண்.124/2015, சட்டப்பிரிவுகள் 3, 4 of Explosive suspension Act வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 17.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் இசக்கி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4 ஆகும்.** வரைபடம் **அ.சா.ஆ.5 ஆகும்.** பின்பு சாட்சிகள் ஸ்டோவான்சேகர், சத்திய

ராகவேந்திரன், சுந்தரைய்யா, ஆறுமுகம், இசக்கி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

வழக்கின் எதிரிகள் கருப்பசாமி, சரவணக்குமார், எபினேசர் ஆகியோர்களை கைது செய்து, கனம் செங்கோட்டை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து வழக்கு கோப்பினை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

அ.சா.1 ஸ்தேவான் சேகர் 11.09.2015 அன்று பகல் 02.00 மணிக்கு மதுவிலக்கு ரோந்து சம்பந்தமாக ரோந்து சென்றதாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் சம்பவதேதியன்று ரோந்து செல்ல பயன்படுத்திய வாகனங்கள் எந்த வகையை சார்ந்தவை என்றும், வாகனங்களின் பதிவெண்கள் குறித்து என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை. சம்பவதேதியின்று அ.சா.1,அ.சா.2 மற்றும் காவலர்கள் ரோந்து சென்றதை காட்டும் பாக்கெட் டைரியை அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் காண்பித்தார்கள், ஆனால் கைப்பற்றவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று அ.சா.1, அ.சா.2 மற்றும் காவலர்கள் யார், யார் சீருடையிலும், யார், யார் மப்டியிலும் சென்றார்கள் என்று என்னுடைய விசாரணையில் துலங்காது. எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் குரங்கு ஓடை பக்கம் சந்தான குத்தகை தோப்பு பக்கம் என்று முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தோப்பிற்கு 4 பக்கங்களிலும் யார், யாருக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்பது என்னுடைய விசாரணையில் துலங்குமா? என்றால் துலங்கும். சர்வே எண்கள் துலங்காது. 1ம் எதிரியை கைது செய்து விசாரிக்கும் போது, பயிர்களை காட்டு பன்றி நாசம் செய்வதால் அவைகளை கொல்ல வெடிகுண்டுகளை

தோப்பிற்கு எடுத்து சென்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். யாருடைய தோப்பிற்கு கொண்டு சென்றார் என்றும், தோப்பிற்கு பக்கத்தில் 1ம் எதிரிக்கு இடம் உள்ளதாகவோ, அந்த தோப்பு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றோ என்று என்னுடைய விசாரணையில் துலங்காது. 2, 3 எதிரிகளுக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பக்கம் தோப்பு உள்ளதா? எவ்வளவு உள்ளது என்பது பற்றிய விபரம் என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். எனது விசாரணையில் எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடத்தில் அத்தாட்சி தயார் செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் ஒரு மணிநேரம் ஆகியிருக்கும். அத்தாட்சியானது எத்தனை பக்கங்களில் எழுதப்பட்டது என்றால் ஒரு பக்கத்தில் எழுதப்பட்டது. தனிநபர்களை சாட்சிகளை சேர்க்காததற்கு என்ன காரணம் என்றால் அவர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. சம்பவயிடத்தில் சம்பவ நேரத்தில் வயல்வெளிகளில் வேலை செய்யும் நபர்கள் இருந்திருப்பார்கள் என்றாலும், அவர்களுக்கும் இந்த சம்பவம் தெரிந்திருக்கும் என்றால் வாய்ப்புள்ளது. எதிரிகள் வெடிகுண்டு தயார் செய்கின்றார்கள் என்று எழுத்து மூலமாகவோ, வாய்மொழி வாயிலாகவோ புகார் வந்ததா? என்றால் இல்லை. எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடத்தில் எதிரிகளை நான் எவ்வளவு நேரம் விசாரித்தேன் என்றால் நான் கைது செய்யவில்லை. எதிரிகளை நான் விசாரணை செய்ததில், எதிரிகள் எந்த இடத்தில் வைத்து வெடிகுண்டுகள் தயார் செய்தார்கள் என்று விசாரித்து, அந்த இடத்தை நான் சோதனை செய்தேனா? என்றால் இல்லை. எதிரிகள் வெடிகுண்டு தயார் செய்வதற்கு மூலப்பொருட்களை எங்கிருந்து, யாரிடம் வாங்கினார்கள் என்றால் அது குறித்து நான் விசாரிக்கவில்லை. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் ரோந்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வீட்டில் இருந்த எதிரிகளை கைது செய்து, காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து புள்ளி விபரக்கணக்கிற்காக பொய் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அத்தாட்சியானது காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தனிநபர்கள் சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல், அவர்களை சாட்சிகளாக சேர்க்காமல் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

சாட்சி தூத்துக்குடி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Arumugaperumal, System Analyst, முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.29 17:37:16 +0530